# பத்திரிக்கை செய்தி

எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் 29.06.2018 அன்று நடைபெறவுள்ளது தொடர்பாக பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப.,** அவர்களின் அறிவிப்பு,

எரிவாயு உருளைகள் மறுநிரப்பு வழங்குவதில் காணப்படும் குறைபாடுகள், நுகர்வோர்கள் பதிவு செய்த குறைகளின்மீது நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு முகவர்களின் மெத்தனப்போக்கு தொடர்பாக வரப்பெறும் புகார்களை பெற்று உரிய நடவடிக்கைகள் எடுத்து, எண்ணெய் நிறுவனங்களின் விதிமுறைகளுக்குட்பட்டு எரிவாயு உருளை விநியோகத்தை சீர்படுத்துவது தொடர்பாக, எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 29.06.2018 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் எரிவாயு முகவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவன விற்பனை அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். எரிவாயு நுகர்வோர்கள் எரிவாயு சம்பந்தமாக குறைகள் இருப்பின், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம் என்றும், எரிவாயு விநியோகம் தொடர்பாக காணப்படும் குறைபாடுகள் களைவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓம்.்.ஆ.அழகிரிசாமி,<br>
மாவட்ட ஆட்சியருக்காக,<br>
பெரம்பலூர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>
பெரம்பலூர்

ந.க.எஸ்2.்.7581.்.2017,<br>
நாள்:21.06.2018.

.்.உ.ந.உ.ப.்.

மாவட்ட வழங்கல் அலுவலரின்<br>
நேர்முக உதவியாளர்.